**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.280/2022 | Village | : | **ஏகௌரியம்மன் நகர், வல்லம்** |
| Prosecution witness | : | PW-1 | Taluk | : | **தஞ்சாவூர்** |
| Name | : | **திரு. மரியபிரான்சிஸ்** | Occupation | : | **விவசாயம்** |
| Father Name | : | **திரு. தங்கபிரகாசம்** | Age | : | 70 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 09.06.2026.**

A1 abated. A2, A3, A4 present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் வல்லம் ஏகௌரியம்மன்நகர் வல்லத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2014 ஆம் ஆண்டு நான் வெளியூருக்கு போய்விட்டு வீட்டிற்கு வந்தேன். மண்டைகோபி, கார்த்திக் மற்றும் இரண்டுபேர்கள் இரண்டு வண்டியில் வந்தார்கள். வண்டியை எங்கள் வீட்டி வாசற்படியில் நிறுத்திவிட்டு ஹாரன் அடித்தார்கள். நான் வெளியூரிலிருந்து வந்து சாப்பாட்டிற்கு உட்கார்ந்திருந்தேன் சத்தம் கேட்டு எழுந்துவந்தேன். ரூபியை போய் வம்பிழுத்தீர்களா என்ற என்னை கேட்டார்கள். நான் வெளியூர் போய்விட்டு இப்போதுதான் வந்தேன் என்று சொன்னேன். எனக்கு தெரியாது என்று சொன்னேன். என் மகன்கள் செசு, டேவிட் தங்கபிரகாசம் ஆகியோர் வந்து காலையில் பேசிகொள்ளலாம் என்று சொன்னார்கள். இப்ப என்னவென்று முடிவு கட்ட வந்தோம் என்று சொல்லி கார்த்தி என்பவர் அரிவாளை எடுத்து என் மண்டையில் வெட்டினார். நான் அவனை கட்டிபிடித்துவிட்டேன், அந்த அரிவாளால் என்னுடைய இடது கையை ராஜேஷ் என்பவன் வாங்கி வெட்டினான். பக்கத்துவீட்டுகாரர்கள் சத்தம் கேட்டு வந்து போலிஸ்க்கு சொன்னார்கள். போலிஸ் வேன் வந்தது, 108 வேன் வந்தது. உட்கார்ந்திருந்த எனது மகன் டேவிட் தங்கபிரகாசம் என் அப்பாவை

வெட்டிவிட்டீர்களே என்று சத்தம் போட்டு கொண்டு வந்தான். ராஜேஷ் என் மகன் தங்கபிரகாசத்தை முதுகில் வெட்டி விட்டான் அரிவாள் மாட்டிவிட்டது கஷ்டபட்டு பிடுங்கி கீழே போட்டான். அதன்பிறகு மருத்துவமனைக்கு போனோம் போலிஸார் அங்கு வந்து விசாரித்து வாக்குமூலம் வாங்கி கொண்டார்கள் தற்போது என்னிடம் காண்பிப்பது அதுதான் அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.06.09 15:03:07 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**